**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC. No. 60/2026**

**PW - 5**

| | | |
|---|---|---|
| Name | : | **நல்லத்தம்பி ( LW.4)** |
| Father's / Husband Name | : | த/பெ. சுப்பிரமணி |
| Village | : | அண்ணா நகர் |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Calling | : | |
| Age | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **15.06.2026** ம் தேதியன்று திரு. துரைகருணாநிதி, உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர்)**

**முன் விசாரணை:–**

1) நான் தற்போது திருச்செங்கோடு, அண்ணா நகரில் குடியிருந்து கிருஷ்டி கம்பெனியில் சூப்பர் வைசராக வேலை செய்து வருகிறேன். கடந்த 11.12.2025 ம் தேதி சுமார் 09.00 – 09.15 மணியளவில் ஆஜர் எதிரிக்கும், அ.சா.2 பூபதி ராஜாவிற்கும் மாணிக்கம்பாளையத்தில் உள்ள அரசு பள்ளி முன்பு சண்டை நடந்து கொண்டிருந்தது. எனது பணியை முடித்துவிட்டு லாரியில் வந்து கொண்டிருந்தபோது சம்பவத்தை பார்த்தேன். ஆஜர் எதிரி பூபதிராஜாவை கெட்ட வார்த்தையால் திட்டிக்கொண்டிருந்தார். நாளைக்குள் வீட்டை காலி செய்ய வில்லை என்றால் பூபதிராஜாவையும், சம்பவயிடத்தில் இருந்த அவரது மனைவியையும் கொன்றுவிடுவதாக மிரட்டினார். பின்னர் நான் அங்கிருந்து சென்றுவிட்டேன். இரண்டு நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

2) நான் எதிரியின் அக்கா மகன். இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்பு இருந்து எனக்கும், எதிரிக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரி. சம்பவத்திற்கு முன்பு எதிரிக்கும், அ.சா.2 ற்கும் இடம் சம்மந்தமான பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரி. எதிரியின் வீட்டில் அ.சா.1, 2 ஆகியோர் 4, 5 ஆண்டுகளாக வாடகைக்கு குடியிருந்தார்கள் என்றால் சரி. சம்பவ காலக்கட்டத்தில் அ.சா.1 அவர் மேற்படி குடியிருந்த வீடு குறித்து அவர் பெயரில் பட்டா பெற்றுவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அது சம்மந்தமாக இருதரப்பினருக்கும்

பிரச்சனை இருந்தது என்றால் சரி. இன்று அ.சா.1 மனைவி நித்யா நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரி. இன்று நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வேண்டி நித்யா கேட்டுக்கொண்டதன் பேரில் தான் நீதிமன்றம் வந்துள்ளேன் என்று சொன்னால் அவரும் சொன்னார், போலிசாரும் சொன்னார்கள். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும், அ.சா.1, 2 கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**
**CC. No. 60/2026**
**PW - 6**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.சந்தியா ( LW.7) |
| Father's / Husband Name | : | க/பெ. ரவி |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | காவல் உதவி ஆய்வாளர் |
| Age | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **15.06.2026** ம் தேதியன்று திரு. துரைகருணாநிதி, உதவியாளர். ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர்)**

**முன் விசாரணை:-**

1) நான் தற்போது வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.12.2025ம் தேதி மதியம் 01.00 மணிக்கு நான் நிலைய அலுவலில் இருந்தபோது நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், அண்ணா நகரை சேர்ந்த நித்யா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகார் மனுவை பெற்று வேலக்கவுண்டம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.169/2025 சட்டப்பிரிவுகள் 296(b), 351(2) BNS ஆக வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். மேற்படி வாதியின் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை கனம் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகி**றது.

2) பின்னர் அன்றைய தினமே சம்பவயிடமான மாணிக்கம்பாளையம், அரசுமேல்நிலைப்பள்ளி அருகில் சென்று சாட்சிகளான ரமேஷ்பாபு மற்றும் கார்த்திக் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகி**றது. பின்னர் அன்றைய தினமே சம்பவயிட சாட்சிகளான 1. நித்யா, 2. பூபதிராஜா, 3. பிரேம்குமார் 4. நல்லத்தம்பி மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளான ரமேஷ்பாபு மற்றும் கார்த்திக் ஆகியோர்களை தனிதனியாக விசாரித்தும் வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) பின்னர் 31.12.2025 ம் தேதி மதியம் 01.00 மணிக்கு நிலையம் ஆஜரான எதிரி பழனிசாமி த.பெ.வையாபுரி என்பவரை கைதுக்கான காரணம் கைது செய்து நிலையப்பாராவசம் ஒப்படைத்து 14.00 மணிக்கு தக்க இருநபர் காவல் பிணையில் விடுவித்தேன். பின்னர் அன்றையதினமே எனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(b), 351(2) BNS ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

4) புகாரானது 2 நாட்கள் காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது. எதிரி 1, 2 சாட்சிகளுக்குஎதிராக புகார் வாக்குமூலத்தின் பேரில் **புகார்தாரர் தரப்பினருக்கு எதிராக குற்ற எண்.168/2025 சட்டப்பிரிவுகள் 296(b), 115(2), 351(2) ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரி. அந்த முதல் தகவல் அறிக்கை தான் என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை ஆகும். அது எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரிகளிடம் நான் தான் புகார் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்தேன். அந்த வழக்கு தான் முதல் வழக்கு ஆகும். பின்னர் இந்த வழக்கின் சாட்சி 1 இடம் இருந்து புகாரை பெற்று எதிர் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. இரண்டு வழக்கிற்கும் நான் தான் புலன் விசாரணை அதிகாரி. எதிரி கொடுத்த புகாரின் பேரில் இறுதி அறிக்கை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி.

5) வாதிகளுக்கும், எதிரிகளுக்கும் இடப்பிரசன்னை இருந்து வருகிறது என்பதை தெரிந்து கொண்டேன் என்றால் சரி. எனது விசாரணையில் பிரச்சனைக்கு காரணமான நிலமானது எதிரியின் மனைவி பெயரில் ஆரம்பத்தில் பட்டா இருந்தது என்பது எனக்கு தெரியவந்ததா என்றால் இல்லை. சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் போன்றவற்றை சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்யவில்லை என்றும், சம்பவயிட சாட்சிகள் யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றும், ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரித்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் இறுதி அறிக்கையில் எதிர் வழக்கு பற்றியும், எதிரிக்கு ஏற்பட்ட காயம் பற்றியும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**நீதிமன்ற விசாரணை –**

எதிர் வழக்கில் ( குற்ற எண்.168/2025 ) நான் வழக்கு சம்பவம் பொய் என்று ( RCS) சொல்லி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

மறு விசாரணை – இல்லை.